<u>நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி</u>
<u>நகர்மன்ற அவசர கூட்டம்</u>

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04.04.2026 நாள் அன்று சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரண கூட்டம்.

நகராட்சி அலுவலகம்,
நந்திவரம்–கூடுவாஞ்சேரி
நாள்: 04.04.2026

நகர் மன்ற துணை தலைவர்
நந்திவரம்–கூடுவாஞ்சேரி
நகராட்சி.

பொருள் எண்.1

செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி 2022–ஆம் ஆண்டு நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் 9 வது வார்டு நகர்மன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டு நகர்மன்ற தலைவராகவும் பதவி வகித்து வரும் திரு.M.K.D. கார்த்திக் தண்டபாணி அவர்கள் 02.04.2026 நாளிட்ட கடிதத்தில் தான் 2026–ஆம் ஆண்டு ஏப்ரல் 23–ஆம் தேதி அன்று நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலில் செங்கல்பட்டு தொகுதியில் வேட்பாளராக போட்டியிடவுள்ளதால் தனது 9 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் பதவி மற்றும் நகர்மன்ற தலைவர் பதவிகளை ராஜினாமா செய்வதாக தெரிவித்துள்ளார். மேற்கண்ட ராஜினாமா கடிதம் நகராட்சி நிர்வாகம் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் விதிகளின்படி ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்

தீர்மானம் எண்.01 – மன்றம் அனுமதி அளிக்கிறது

நகர் மன்ற துணை தலைவர்
நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி